<u>செய்தி வெளியீடு எண்.659</u> <u>நாள்.14.8.2008</u>

# அண்ணா நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் புகார்களே இல்லாத ஆண்டு என்ற நிலையை உருவாக்க வேண்டும் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு ஆணை

*****************

மாண்புமிகு உணவு அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் 14.8.2008 காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அலுவலர்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார்கள்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆய்வுக் கூட்டத்தில் பங்கு பெற்றனர்.

தலைமைச் செயலகத்தில் இரண்டாம் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்ற இக்கூட்டத்தை துவக்கி வைத்து உரையாற்றுகையில் பொது விநியோகத் திட்டத்திற்கு தேவையான அனைத்து அத்தியாவசிய பொருட்களும் அனைத்து நியாய விலை கடைகளுக்கும் அனுப்பப்பட்டும், விற்பனையாளர்கள் இருப்பு இல்லை என்று தெரிவிப்பதாக புகார்கள் பெறப்பட்டால் உடனடியாக அத்தகைய விற்பனையாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். 13.8.2008 அன்று ஓட்டேரி நியாய விலைக் கடையின் விற்பனையாளர் அத்தியாவசியப் பொருட்களை வைத்துக் கொண்டு பொதுமக்களிடம் இருப்பு இல்லை என்று தெரிவிப்பதாக புகார் பெறப்பட்டு, விசாரணை செய்யப்பட்டதில் விற்பனையாளர் தவறு செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளால் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்களை உடனுக்குடன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய அளவில் பொருட்கள் வழங்க வேண்டும். 20 கிலோ அரிசி வழங்கப்படவேண்டிய குடும்ப அட்டைகளுக்கு அளவு குறைத்து வழங்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். நியாய விலைக் கடைகளில் இருப்பு இல்லை என்று புகார்கள் பெறப்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீதும் விற்பனையாளர்கள் மீதும் தக்க நடடிவக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். சிறப்பு பொது விநியோகத் திட்டத்தில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், கோதுமை மாவு போன்ற பொருட்கள் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கவும், இதை கண்காணிக்கவும் வலியுறுத்தினார். ஒவ்வொரு வட்டத்திலும் பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டங்கள் நடைபெறும் போது பெறப்படும் புகார்களை உடனுக்குடன் தீர்வு செய்யப்பட வேண்டும். காலதாமதமின்றி புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படவேண்டும் என்றும் கூறினார். புதிய குடும்ப அட்டைகளை விண்ணப்பித்த 60 நாட்களுக்குள் வழங்கப்படவேண்டும் என்றும் விலாசம் மாற்றம், பெயர் மாற்றம், மண்டல மாற்றம் மற்றும் பெயர் சேர்த்தல் / நீக்குதல் போன்றவைகள் காலதாமதமின்றி வழங்கப்பட வேண்டும் அல்லது உரிய பதில் அனுப்பப்படவேண்டும். பொது மக்களுக்கு உரிய பதில் அளிப்பதுடன், அவர்களை கண்ணியமாகவும், மரியாதையாகவும் நடத்த வேண்டும். வீண் அலைச்சல் ஏற்படுத்த கூடாது. இப்பணிகளை சரியாக செய்யாத அலுவலர்கள் கடமை தவறியவர்களாக கருதப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும்

உதவி ஆணையாளருக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்கள். தினசரி உதவி ஆணையர் அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறப்படும் கவுண்டர்களில் விண்ணப்பதாரர்களுக்கு இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் குறித்து தெளிவாக எடுத்துக் கூற வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

போலி குடும்ப அட்டைகளாக இருக்கும் என்று கருதினால் முதலில் பொருள் நிறுத்த ஆணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் மேல் முறையீடு செய்ய வாய்ப்பளிக்கப்படுகிறது. மேல்முறையீட்டு அலுவலர்கள் மீண்டும் விசாரணை செய்து போலி குடும்ப அட்டை தான் என்று உறுதிபடுத்தினால் அத்தகைய குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட வேண்டும். மேல் முறையீட்டாளரின் கோரிக்கை சரியானது தான் என்று நிரூபிக்கப்பட்டால் குடும்ப அட்டை மீண்டும் மேல்முறையீட்டு மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

போலி குடும்ப அட்டைகள் ரத்து செய்யப்பட்டால் அத்தகைய குடும்ப அட்டைகளை நியாய விலைக் கடைகளில் 'அ' பதிவேட்டில் நீக்கப்படுவதுடன் கணினியிலும் நீக்கப்படவேண்டும்.

உணவகங்களில் சிற்றுண்டியின் விலை 10லிருந்து 15 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளதா என்றும் 20 ரூபாய் மலிவு விலை சாப்பாடு தொடர்ந்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றதா என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

அண்ணா நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இவ்வாண்டில் பொது விநியோகத் திட்டத்தில் புகார்களே இல்லாத ஆண்டாக இருக்க முனைப்போடு செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திரு. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9